# அதிசயகாட்சி.

## தகப்பனுக்கும் தன் மகனுக்கும் நடந்த ஒரு சம்பாஷணை.

**மகன்.**—அப்பா, நான் ஆற்றூர்க்குப்போனேன்; அவ்விடத்தில், இதுவரையிலுங்காணாத ஓர் காட்சியைக் கண்டேன்.

**தகப்பன்.**—அதென்ன?

**மகன்.**—அவ்விடத்தில் ஓராயிரம்பேர்போல் நின்றுக்கொண்டிருந்தார்கள். ஒருவன் மற்றொருவனை தண்ணீரில் கொண்டுபோய் பிதா, குமாரன், பரிசுத்த, ஆவியின் நாமத்தினால் *சிரஸ்நானம் செய்துவைக்கிறதைப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அதுபோலவே, யின்னும் அனேகரையும் ஸ்நானஞ்செய்துவைத்ததைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஜலத்தைவிட்டு வெளியில்வந்தபிரகு உலர்ந்த உடுப்புகள் தரித்துக்கொள்ள ஓர் கூடாரத்துக்குள் போனார்கள்.

**தகப்பன்.**—ஆம் மகனே. நீ ஒரு அதிசயத்தைக் கண்டாய், ஆனால், அதைப்பார்த்து நீ நகைக்கவில்லையென்று நினைக்கிறேன்.

**மகன்.**—அப்பா, அதிகமாய் நகைக்கவில்லை; ஆனால் கொஞ்சங்கூட நகைக்காமல் இருக்க என்னால்கூடயில்லை, மற்றபேர்களும் நகைத்ததைக்கண்டேன்.

**தகப்பன்.**—அதற்காக நான் விசனப்படுகிறேன். தெய்வபக்தியாய் இருக்கிறவர்களைப்பார்த்து நீ நகைக்கலாகாது, முக்கியமாய் இயேசுகிறிஸ்துவின் கட்டளையின்படி செய்கி

* ஞானஸ்நானம்.

நதாய்தம்பி, ஒருகாரியத்தை அவர்கள் செய்கையில் அதை ப்பார்த்து நகைக்கலாகாது. இனிமேல் நீ அப்படிசெய்யாயென்று விரும்புகிறேன்.

**மகன்.**—அப்பா இதை இயேசுக்கிறிஸ்துவின் கட்டளை என்று பேசுனென்னுகிதீர்?

**தகப்பன்.**—இது ஓர்விதமான ஞானஸ்நானமென்பதற்கு சந்தேகம் இல்லே. ஆனால், ஞானஸ்நானம் பண்ணப்படுபவர் இன்னுரென்றும் அதைசெய்விப்பது இம்முறையென்றும் படித்த பண்டிதர்களுக்குள் விவாதப்பட்டிருக்கின்றது. அப்போதகர் அப்படி சொல்லவில்லேயா?

**மகன்.**—ஆம், அந்த ஸ்நானத்தைப்பற்றி நெடுநேரம் பேசினுர், அவர் சொன்னவைகளில் அனேகம் எனக்கு ஞாபகம் இருக்கிறது; ஆனுல், சிலர் நகைத்துப்பேசிக்கொண்டிருந்தார்கள்.

**தகப்பன்.**—அப்படிச்செய்வது மிகவும் தப்பான காரியம். அவர்கள் அவர்சொல்லுவதைக் கவனமாய்க்கேட்டிருக்கவேண்டியது. நகைக்கிறதினுல் அந்தப்போதகர்செய்தது தப்பென்று ருசிக்கிற தல்ல ஆனுல், அது நகைத்தவர்களுடைய துன்மார்க்கத்தைக் காட்டுகிறது, ஒரு மூடன் சாலோமோனுடைய ஞானத்தைப்பற்றி நகைத்தாலும் அதனுல் சிறுமை ஒன்றுமில்லே; அந்தப்போதகர் தாம் ஸ்நானம் கொடுத்ததற்கு எதாகிலும் காரணம்சொன்னது உனக்கு ஞாபகம் உண்டா.

**மகன்.**—அப்பா எனக்குப் பூர்த்தியான ஞாபகம் இல்லே அவர்சொன்னது கிறிஸ்துமார்க்கத்தின் கொள்கைகளுக்குப் புதிய ஏற்பாடுதான் நூல் என்றும், கிறிஸ்தவர்களுடைய நடபடிக்கைகளுக்கு அதுவே சட்டம் என்றும் சொன்னுர். அதை மாற்றுகிறதும், அல்லது அதிகமாகச் சேர்க்கிறதும் குறைக்கிறதும் மிகவும் துணிகரம் என்றும் அப்படிச்செய்வதனுல் நாம் கிறிஸ்துவைப்பார்க்கிலும் திறமையுடையவர்களாகவும் அவரிலும் நல்லவராகவும் அவரிலும் அதிக அதிகாரம் உடைய

வர்களைப்போலவும் காணப்படுகிறது. அன்றியும் அவருடைய வேதத்தைநாம் திருத்தினதுபோலவும் ஆகிறது.

**தகப்பன்.**—அப்படியா! அவர்சொன்னது மிகவும் உண்மையுள்ளதுதான். அவைகளுக்கு ஏதாவது திருஷ்டாந்திரங் கொடுத்தாரா?

**மகன்.**—ஆம், ௫ மோசே ௰௨ : ௩௰௨. "நான் உங்களுக்குக் கற்பிக்கிறதை எல்லாம் செய்யும்படிக்குக் கைக்கொள்வீர்களாக. நீ அதனோடு ஒன்றும் கூட்டவும் அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்." மத்தேயு ௨௮ : ௨௰. நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். லூக்கா ௧௧ : ௨௮. அவர்சொன்னது அதனிலும் அதிகமாய் பராபரனுடைய வார்த்தைக்கேட்டு அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள் என்றார். மேலும், மனிதர் தங்களுடைய சுய இஷ்டப்படி செய்கிறது தேவனுக்கு அருவருப்பானதாய் இருக்கிறது என்று ரூபிக்க. மத்தேயு ௰௫ : ௯. "மனிதருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனைசெய்கிறார்கள்." ஆலோசனைச்சங்கத்தார் செய்த ஒரு கட்டளையைமாற்ற ஒரு மனிதனுக்கு எவ்வளவு அதிகாரம் வேண்டியதோ அதைப்பார்க்கிலும் அதிகமான அதிகாரம் இருந்தால் தான் தேவகட்டளையை மாற்றலாமென்றும் அந்தப்போதகர் சொன்னார் அது மெய்தானா அப்பா?

**தகப்பன்.**—ஆம், தேவகட்டளையை மாற்றுகிறது லேசான காரியம் அல்ல; ஆனால், ஒருவனுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவேண்டுமானால், அவனைத் தண்ணீரில்கொண்டு போய் முழுக்காட்டுவது அவசியம் என்பதை ரூபித்தாரா?

**மகன்.**—ஆம். பேப்டைஸ் (Baptize) என்கிற மொழிக்கு அர்த்தம் **முழுக்கு** என்றும் நம்முடைய முன்னோர்களும் பெரியோர்களும் அதுவே அர்த்தமென்றும் பாவித்தார்கள் மேலும், நம்முடைய புராதன அகராதிகளும் அதேப்பிரகாரம் அர்த்தஞ்சொல்லுகிறதென்றுஞ் சொன்னார், மேலும்

ஞானஸ்நானமானது வேதத்தில் அடக்கம்பண்ணுதலுக்கும் உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாய் இருக்கிறதென்றும் சொன்னார்.

**தகப்பன்.**—ஆம், அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர்களுக்கு எழுதின நிருபம் ௬-ம் அதிகாரத்திலும், கொலோசெயருக்கு எழுதின நிருபம் ௨-ம் அதிகாரத்திலும் சொல்லியிருக்கிறார்.

**மகன்.**—ஆம், அவைகளில்தான் என்று நினைக்கிறேன்.

**தகப்பன்.**—இன்னும் ஏதாகிலும் திருஷ்டாந்திரங் கொடுத்தாரா?

**மகன்.**—ஆம், அவர் இன்னும் கொடுத்த திருஷ்டாந்திரங்களால் எனக்கு அதிக ஆச்சரியமும் வெட்கமுமாயிருக்கிறது.

**தகப்பன்.**—அதென்ன மகனே?

**மகன்.**—அது என்னவென்றால் நம்முடைய செபபுஸ்தகத்தில் உள்ளவைகள்தான்.

**தகப்பன்.**—நம்முடைய செபபுஸ்தகத்தில் உள்ளவைகள்தானா அவைகள் என்ன?

**மகன்.**—ஞான உபதேசத்தில் இருக்கிற வினாவிடைகள் எவையென்றால், வினா. "ஸ்நானத்தில் காணப்படுகிற புறம்பான அடையாளம் அல்லது முறைமை என்ன?" விடை. தண்ணீரில் ஞானஸ்நானம் பெறவேண்டியது; அன்றியும், முதிர்ந்தபிராயம் உள்ளவர்களுடைய ஞானஸ்நானத்தின் விதத்தைச் சொன்னார்; அதாவது, அவர்களை **சலத்தில் முழுக்காட்டி** அல்லது அவர்கள்மேல் சலத்தை வார்க்கவேண்டியது. மேலும் வீடுகளில் பிள்ளைகளுக்குத் தனிமையாகக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமையின் கடைசிப்பங்கில் உள்ளதை வாசித்துக்காட்டினார். அதாவது, பிள்ளையை ஞானஸ்நானத்தொட்டியில் **முழுக்காட்ட வேண்டியது.**

**தகப்பன்.**—இன்னும் எதைச்சொன்னார்?

**மகன்.**—குழந்தைகளுடைய வெளியரங்க ஸ்நானத்தை எடுத்துச்சொன்னார். அதாவது, பிள்ளை சலத்தில் முழுக்காட்டத்தாங்குமென்று அவர்கள் (பிள்ளையின் தாய்தந்தைமார்) சொன்னால் பத்திரமாய் முழுக்காட்டுவாளாக அன்றியும் அந்தக் குழந்தை பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்து கிறிஸ்துவின் மரணத்திற்குள் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறதென்றும் எழுதியிருக்கிறதை வாசித்து சொன்னார்.

**தகப்பன்.**—இதைக் கேட்டபிறகு சர்ச்சு ஆப் இங்லாண்டு (Church of England) சபையார் நகைக்கவில்லை என்று நினைக்கிறேன்.

**மகன்.**—ஏன் அப்படி நினைக்கின்றீர். இதைக்கேட்டும் அவர்கள் நகைத்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

**தகப்பன்.**—அதைக்கேட்டும் நகைத்ததற்காக அவர்கள் வெட்கப்படவேண்டியது. ஆனால், ஸ்நானத்திற்குத்தகுந்தவர்கள் புருஷர்கள்தானென்றும் ஸ்திரீகள்தான் என்றும் எப்படி ருசுபடுத்தினார்?

**மகன்.**—லூக்கா ௩ அதிகாரம் ௨௩-ம் வாக்கியத்தில் உள்ளபடி இயேசுக்கிறிஸ்து ஞானஸ்நானம் பெறுகையில் முப்பதுவயது உள்ளவராய் இருந்தார் என்கிறதைச் சொன்னார். ஆனால் புருஷர்களாயும் ஸ்திரீகளாயும் இருக்கிறது மாத்திரம் போதாது. அவர்கள் மனந்திரும்பினவர்களாயும், விசுவாசம் உள்ளவர்களாயும் தேவவாக்கியத்தைச் சந்தோஷமாய் அங்கீகரித்தவர்களாயும் இருக்கவேண்டியது. அப்படி இல்லாவிட்டால் ஸ்நானத்திற்கு அவர்கள தகுந்தவர்கள் அல்ல என்பதாகவும் சொன்னார்.

**தகப்பன்.**—இதை எப்படி ருசுபடித்தினார்?

**மகன்.**—இதை ரூபிக்க வேதத்தில் உள்ள பத்துவாக்கியங்களை எடுத்துச்சொன்னதாக எனக்கு கியாபகமிருக்கிறது. ஆனால், அவைகளில் சிலதை சொல்லுகிறேன்.

**தகப்பன்.**—அவைகள் எவை?

**மகன்.**—அவைகள் யாவனில்: முதலாவது மத்தேயு ௩: ௬. அங்கே மனந்திரும்பினவர்களும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டவர்களும் ஸ்நானம்பெற்றதாகக் காணப்படுகிறது. மத்தேயு ௨௮: ௧௯, ௨௦ மார்க்கு ௧௬: ௧௫, ௧௬-ல் ஸ்நானம் பெறுமுன் மனிதர் கற்பிக்கப்படவேண்டியதும் அவர்கள் விசுவாசிக்கவேண்டியதும் என்பதாகக் காணப்படுகிறது. அப்போஸ்தலர் ௨: ௩௭—௪௧-இந்த வேதவாக்கியத்தில் ஸ்நானம் பெறுகிறதற்குமுன் அவர்கள் தங்கள் இருதயங்களில் குற்றுண்டவர்களாயும், வேதத்தைச் சந்தோஷமாய் அங்கிகரித்துக்கொண்டவர்களாயும் இருக்கிறதாகக் காணப்படுகிறது. மேலும் அப்போஸ்தலர் ௮: ௧௨, ௩௬, ௩௭-ம் வாக்கியங்களில் கந்தாசியின் மந்திரி தண்ணீரில்போய் ஸ்நானம்பெறுமுன் தன் விசுவாசத்தை அறிக்கையிட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் ௯-ல் சவுல் ஸ்நானம் பெறுமுன் மனம் திரும்பினவனாய் இருந்ததாகக் காணப்படுகிறது. அப்போஸதலர் ௧௦, கொர்னேலியுவும், தன் வீட்டாரும் பரிசுத்த ஆவியைப்பெற்றுத் தேவனை மகிமைப்படுத்தி பிறகு ஸ்நானம் பெற்றதாகக் காணப்படுகிறது. அப்போஸ்தலர் ௧௬-ல் லீதியா என்பவளும் சிறைச்சாலைக்காரனும் அப்படியே செய்ததுபோலக் காணப்படுகிறது. மேலும், அந்தப்போதகர் சொன்னதுஸ்நானம் விசுவாச அறிக்கையாய் இருக்கிறது. ஒருவனுககு விசுவாசம் இல்லாதிருக்கும்போது அவன் எப்படி அறிக்கையிடக்கூடும். மேலும அது நல்ல மனசாக்ஷியின் ஒரு உறுதிப்பாடாய் இருக்கிறது அப்படி இருக்க ஒருவனுக்கு மனசாட்சியில்லாதிருக்கும்போது அவன் எப்படி உறுதியாய்ச்சொல்லுவான்.

**தகப்பன்.**—இதுவேதத்திலுள்ள அத்தாட்சியாயும் நம்பப்படத்தக்கதாயும் இருக்கிறது. இதை உறுதிப்படுத்தச் செப புஸ்தகம் கொண்டுவரவில்லையென்று நினைக்கிறேன்.

**மகன்.**—ஆம் அவர் செபபுஸ்தகத்தைக்கூட அத்தாக்ஷியாகச்சொன்னார்.

**தகப்பன்.**—எப்படி?

**மகன்.**—ஞானஸ்நானம் பெற வருகிறவர்களிடத்தில் காணப்படவேண்டியவைகளைக் குறித்து வினாவிடையை யெடுத்துச்சொன்னார். அதாவது, அவர்கள் பாவத்தைவிட்டு விலகி குணப்படுதலும், இந்தச் சாக்கிரமெண்டுகளில் பராபரன் தங்களுக்கு அருளின வாக்குத்தத்தங்களை உறுதியாய் நம்புகிற விசுவாசமுமே.

**தகப்பன்.**—இன்னும் வேறே எந்தவாக்கியமாவது எடுத்துக் காட்டினாரா?

**மகன்.**—ஆம், ஞானோபதேசத்தின் கேள்விப்படி ஆவிக்குரிய உள்ளானகிருபை ஞானஸ்நானத்திற்கு அடையாளமாச்சுதே? அப்படியானால், அது ஒரு சிறுகுழந்தையில் காணப்படும் என்பதற்கு ஒரு அத்தாட்சியும் இல்லையே, அதுவுமன்றி ஒரு சிறுகுழந்தையில் எப்போது பாவத்திற்கு இறப்பும் நீதிக்குப் புதுப்பிறப்பும் காணப்பட்டிருக்கிறதென்றும் கேட்டார்.

**தகப்பன்.**—இன்னும் எதைச்சொன்னார்?

**மகன்.**—முதிர்ந்த வயதுள்ளவர்களுடைய ஞானஸ்நானத்தைப்பற்றிய கேள்விகளைச் சொல்லிக்காட்டினார். அதாவது, நீ பசாசையும் அதன் கிரியைகள் எல்லாவற்றையும் இவ்வுலகத்தின் வீண் ஆடம்பரங்களையும் மகிமையையும் அதைப்பற்றிய பொருளாசைகள் எல்லாவற்றையும் மாம்சஇச்சைகளையும் வெறுத்து அவைகளுக்குப்பின்செல்லாதபடிக்கும் அவைகளால் நடத்தப்படாதபடிக்கும் விட்டுவிடுகிறாயா? விடை. ஆம், அவைகள் எல்லாவற்றையும் வெறுத்து விடுகிறேன். வினா. வானத்தையும் பூமியையும் படைத்தவராகிய சருவ வல்லமையுள்ள பிதாவாயிருக்கிற பராபரனை விசுவாசிக்கிறாயா? விடை இவைகள் எல்லாவற்றையும் உறு

தியாய் விசுவாசிக்கிறேன். இவைகளை அவர் எடுத்துக்காட்டிச் சொன்னது ஞானஸ்நானம் பெறவேண்டுமானால் மனந்திரும்புதலும் விசுவாசமும் பாவ அறிக்கையும் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தகுந்த விருப்பமுதலியவைகள் அவசியம் என்று நம்முடைய சபைத்திட்டங்களும் உரைத்திருக்கின்றன. பெரியோர்களுங் உரைசொல்லி யிருக்கிறார்கள் அல்லவா.

**தகப்பன்.**—அவரதை சொன்னத்தினால் பிரயோசனமென்ன?

**மகன்.**—என்னவென்றால், இப்படியிருக்க பியர்ப்டிஸ் சபையார்களைப் பரியாசம்செய்கிறதும் தூஷணிக்கிறதும் எவ்வளவு அயோக்கியமானகாரியம் என்பதை நீங்களே நியாயமாய் ஆலோசித்துப் பட்சபாதம் இன்றிப் பியாப்டிஸ் சபையாரோ (Babtists) அல்லது சர்ச்சபையாரோ (Church people) கிறிஸ்துமார்க்கத்தின் ஒழுங்கின்படி யார்செய்கிறார்கள் என்று நியாயமாய் ஆலோசியுங்களென்றார்.

**தகப்பன்.**—அவர்சொன்னது நியாயமானவார்த்தை இதற்கு விரோதமாய் யாரும் ஒன்றுஞ் சொல்லவில்லையென்று நினைக்கிறேன்.

**மகன்.**—என்பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒருமனிதன் கொஞ்சம் உரக்க இவர் ஞானஸ்நானத்தை ஒரு பெரிய காரியமென்று எண்ணி மிகுதியாய் வசனித்து இக்காரியத்தைச் செய்கிறார். அப்படிச்செய்யாமல் இதை இவர் விட்டுவிடுகிறதே எனக்கு இஷ்டமென்று சொன்னான் இப்படிச் சொன்னது அப்போதகர்செவியில் விழுந்திருக்கலாம்.

**தகப்பன்.**—அந்தப்போதகருடைய செவியில் விழுந்திருக்கலாமென்று ஏனெண்ணுகிறாய்.

**மகன்.**—ஏனென்றால், அவர்சொன்னது சிலர் எங்களுடைய நியாயத்திற்கு விரோதமாய் ஒன்றும்சொல்ல இடமில்

லாவிட்டாலும் ஞானஸ்நானம் ஒரு பெருயகாரியமென்றும் அதை விசேஷமாய்ச் செய்கிறோமென்றும் சொல்லுகிறார்கள். நாங்கள் ஒருபோதும் அப்படிச்செய்கிறதில்லை, எங்கள் கொள்கையை அனுசரிக்காதவர்களும் முக்கியமாய் சர்ச்சாப் இங்கிலாண்டு சபையார்களும் ஞானஸ்நானம் பெரியகாரியமென்று செய்கிறார்களே ஒழிய நாங்களல்ல.

*தகப்பன்.*—ஆம், அவர்காதில் விழுந்ததுபோலத்தானிருக்கிறது; இன்னும் அப்போதகர் என்னசொன்னார்.

*மகன்.*—அவர் ஞானஸ்நானமானது தெய்வகட்டளையாயும் இயேசுகிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டதாயும் இருக்கிறது அவருக்குக் கீழ்ப்படிகிற ஒவ்வொரு விசுவாசியும் பிதாகுமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினால் ஸ்நானம் பெறவேண்டியது அவசியந்தான். கிறிஸ்துவை விசுவாசிக்கிறான் என்பதற்கும் அவருக்கெத்தனை ஒப்புக்கொடுத்தான் என்பதற்கும் தான் பாவத்திற்கு மரித்தான் என்பதற்கும் அடக்கம பண்ணப்பட்டுக் கிறிஸ்துவுடன் உயிர்த்து எழுந்தவனாயிருக்கிறான் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது இதைத்தானறிந்தவனாயும் அனுபவித்தவனாயும், அபேக்ஷித்தவனாயும் இருக்கவேண்டியது.

*தகப்பன்.*—நல்லது இன்னும் அவர் சொன்னதென்ன?

*மகன்.*—இன்னும் அப்போதகர் சொன்னது நாங்கள் ஞானஸ்நானம் பெரியகாரியமென்றும் அதை விசேஷமாய்ச் செய்கிறோமென்றும் சொல்லுகிறார்கள். எங்கள் எதிரிகள் அதை இலேசாயெண்ணிச் சும்மாயிருக்கிறார்களா? அவர்களுடைய ஞானோபதேசத்திலிருக்கிறதை வாசித்துப்பாருங்கள். என்னவென்றால், நான் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவின் அவயவமும் பராபரனுடைய பிள்ளையும் பரலோக இராச்சியத்திற்குச் சுதந்தரவாளியுமானபொழுது என்ஞானத்தாய் தகப்பன்மார் இந்தப்பெயர் எனக்கிட்டார்கள். பிறகு

பிள்ளைகளுக்குத் தனிமையாக வீடுகளில் கொடுக்கும் ஞானஸ்நானமுறைமையைப் பாருங்கள். அதாவது: இந்தப் பிள்ளை ஞானஸ்நானத்தினாலே மறுபடியும் பிறந்து கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும், ஜென்மபாவம் உள்ளவனும் தேவகோபாக்கினைக்கு உட்பட்டவனும் பிறந்த இந்தப்பிள்ளை ஞானஸ்நானத்திலுள்ள மறுபிறப்பாகிய முழுக்கினாலே இப்பொழுது பராபரனுடைய பிள்ளைகளும் நித்தியசீவனுக்குச் சுதந்தரருமாகிய கூட்டத்தில் சேர்க்கப்பட்டதாயிருக்கிறதென்றும் அவர்கள் ஞான உபதேசம் சொல்லுகிறதல்லவா? எப்பொழுது பாப்டிஸ்ட்டியர் ஞானஸ்நானத்தை இவ்வளவு பெரியதாயெண்ணி மேன்மைபாராட்டினார்கள் என்றும் கேட்டார்.

***தகப்பன்***—ஆம் நியாயந்தான் இன்னுமென்ன சொன்னார்.

***மகன்***—ஞானஸ்நானத்தினால் இரக்ஷிக்கப்படுவார்கள் என்றும் தம்முடைய சபை சொல்லுகிறதாகச் சொன்னார்.

***தகப்பன்***—அப்படியா எங்கே அவ்விதமாக நம்முடைய சபை சொல்லுகிறது.

***மகன்***—தம்முடைய ஞானோபதேசத்தில் இருக்கிற வினாவிடைகளில் இருக்கிறதைச்சொன்னார் அதாவது, வினா கிறிஸ்துவானவர் தமதுசபையில் ஏற்படுத்தின சாக்கிரமெந்துகள் எத்தனை? விடை. ஞானஸ்நானமும் கர்த்தருடைய இராப்போசனமும் ஆகிய இவ்விரண்டுமாத்திரமே **இரட்சிப்புக்குப் பொதுப்பட** அவசியமென்று ஏற்படுத்தினார். இதனாலே ஞானஸ்நானத்தினால் இரட்சிக்கப்படலாமென்று தோன்றுகிறதல்லவா? இன்னும் குழந்தைகளுக்கு வெளியரங்கமாகக்கொடுக்கும் ஞானஸ்நான முறைமையிலுள்ளதையெடுத்துக்காட்டினார். அதாவது, ஞானஸ்நானம் பெற்றிருக்கிற பிள்ளைகள் கருமபாவத்தைச் செய்யாதவர்களாய் இறந்

தால் இரட்சிக்கப்படுவார்களென்பது வேதவசனத்தில் நிச்சயமாகவே இருக்கிறது. மேலும் மரித்தோரை அடக்கம்பண்ணும் ஒழுங்கிலுள்ளவைகளில் ஒன்றைச்சொன்னார். அதாவது, தங்கள் கொள்கையின்படி ஞானஸ்நானம் பெறாமல் மரித்தவர்களைத் தங்கள் கல்லறைகளில் அடக்கம் பண்ணமாட்டார்கள்; ஏனென்றால் அவர்கள் கிறிஸ்தவர்களல்லவாம் இவைகளெல்லாம் தம்முடைய செபபுஸ்தகத்திலிருந்து எடுத்துக்காட்டி தாமே ஞானஸ்நானத்தை ஒரு பெரியகாரியமென்றெண்ணி அவ்வளவாய்ச் செய்கிறோமென்று ருசுப்படுத்தினார்.

**தகப்பன்.**—இவைகளை அவர்கள் கேட்டபின்பு நகைக்கவில்லையென்று நினைக்கிறேன்.

**மகன்.**—நகைக்கவில்லை ஆனால் கோபமாயிருந்தார்கள். அவர் இதைக் கவனிக்காமல் சர்ச்சுகாரர் இவ்வளவாய்ச் செய்கிறதுமன்றி வேதத்தில் உள்ளபிரகாரம் ஒவ்வொரு விசுவாசியும் செய்யவேண்டிய கடமையைச் செய்கிறதும் செய்யவேண்டிய அவசியத்தைப் போதிக்கும் பாப்டிஸ்ட் காரரை இகழ்ச்சிசெய்கிறவர்களுக்கு மிகவும் வெட்கம் அந்தப்போதகருடைய அபிப்பிராயமாவது எவ்விதமாய் ஒரு விசுவாசி அதை அசட்டைபண்ணலாம். அப்படிச்செய்கிறது தேவனுடைய ஏற்பாட்டை அசட்டைசெய்கிறது போலிருக்கிறது லூக்கா எ - ௩௰.

**தகப்பன்.**—பாலகருடைய ஞானஸ்நானத்தைக்குறித்து அவர் பேசுகையில் ஞானத்தாய் ஞானத்தகப்பன்மார்க் குழந்தைகளுக்காக வாக்குத்தத்தம் செய்கிறதைப்பற்றிச சொல்லவில்லையா.

**மகன்.**—சொன்னார். என்னவென்றால், அப்படி பிள்ளைக்காக வேறே யொருவர் வாக்குத்தத்தம் செய்கிறதைப் பற்றி வேதத்தில்கட்டளையாவது திருஷ்டாந்தமாவது தான் காணவில்லையென்றும் அப்படிச்செய்கிறது பாப்புமார்க்கத்தாருடைய சுய இஷ்டமாயும், அல்லது மனிதர்களுடைய

பாரம்பரியக் கொள்கையாயும் இருக்கிறது. ஞானத்தாய் தகப்பன்மார்கள் தம்முடைய சுய நடத்தைகளுக்குச் சரியான உத்தரவுசொல்லத் திராணியற்றவர்களாய் இருக்கையில் சிறு பாலகருடைய நடத்தைகளுக்காக உத்தரவுசொல்ல ஒப்புக்கொள்ளுகிறது பொய்சத்தியம் பண்ணுகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.

**தகப்பன்.**—அவர் இப்படிசசொன்னது மிகவும் துணிகரமென்று நினைக்கவில்லையா ?

**மகன்.**—ஆம், தகப்பனே ஆனால் அவர் எங்கள் எல்லாரையும் சுற்றிப்பார்த்துச் சொன்னதாவது நாமெல்லாரும் ஞாயத்தீர்ப்புநாளில் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாகநின்று நம்முடைய நடத்தைகளுக்காகக் கணக்குக்கொடுக்கவேண்டியதல்லவா. தேவகட்டளையை நாம் அசட்டைசெய்து அவர் கட்டளையிடாதகாரியத்தைக் கைக்கொண்டு முக்கியமாய் பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் செய்தால் அவருக்கு என்னகணக்கைக் கொடுப்போம் இப்படி நியாயத்தீர்ப்புநாளில் நம்முடைய நடத்தைகளுக்காகக் கணக்குக்கொடுக்கவேண்டியது என்று அவர் சொல்லுகையில் நான் பயத்தினால் நடுநடுங்கினேன். ஆனால், என் ஞானத்தாய் தகப்பன்மார் என் நடத்தைகளுக்காக அவர்கள் செய்த வாக்குத்தத்தத்தின்படி நான் செய்யாமல் போனால் அவர்கள் என் அனுமதியின்றி வாக்குத்தத்தம் பண்ணினபடியினால் அவர்கள் எனக்குப் பதிலாகக் கணக்குக்கொடுப்பார்கள் என்று நினைத்தேன்.

**தகப்பன்.**—ஓ என்மகனே நீ இப்படிச்சொல்லலாகாது நீ சரியான வயதுக்கு வந்தபிறகு உன் நடைத்தைகளுக்காக நீயே உத்தரவுசெய்யவேண்டியது.

**மகன்.**—அது மிகவும் கடினமானகாரியம்; ஏனெனில்என் முழு இருதயத்தோடும் தேவனுக்கு நான் பயப்படவேண்டியது என்று வாக்குத்தத்தம் பண்ணினார்கள் அல்லவா ?

**தகப்பன்.**—ஆம், அதுமாத்திரமல்ல தேவனுடைய எல்லாப் பரிசுத்தகற்பனைகளையும் நீ கைக்கொள்ளவேண்டியது என்றும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்கள்.

**மகன்.**—அப்படிச்செய்ய என்றால் கூடவில்லையே நான் ஒருநாள் பிரயாசைப்பட்டுப் பார்த்தேன் அப்படிச்செய்ய உம்மால் ஆகுமா தகப்பனே.

**தகப்பன்.**—மகனே நம்மாலேயானமட்டும் நாம் செய்யவேண்டியது.

**மகன்.**—ஆனால் என்னால் ஆனமட்டும் எனக்குச் செய்யக்கூடவில்லை, நான் நேற்று ஒருபொய் சொன்னதற்காக நீர் ஏன்னை அடித்தீரே.

**தகப்பன்.**—உனக்கு அது வேண்டியதுதான்.

**மகன்.**—தகப்பனே அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்: அது என்னால் கூடியமட்டும் செய்யக்கூடாதென்பதைக் காட்டுகிறதல்லவா, நான் இப்பொழுது செய்யவேண்டியது எது?

**தகப்பன்.**—அதற்காக நீ இப்பொழுது மனந்திரும்பி இனிமேல் அப்படிச் செய்யாதிருக்கவேண்டியது தான்

**மகன்.**—தகப்பனே அப்படிச் செய்வேனென்று நான் நினைக்கிறேன் ஆனால் எல்லாக்கட்டளைகளும் கைக்கொண்டு அவைகளின்படி நான் செய்வேனென்று உறுதியான நம்பிக்கைப்பட சொல்லமாட்டேன் அப்படிச் செய்வேனென்று என் ஞானத்தாய் தந்தைகள் எனக்குப் பதிலாய் வாக்குத்தத்தம் செய்ய எவ்வளவேனும் அவர்களுக்கு இடமில்லை என்னுடைய சொந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறதே அறிதாயிருக்க அவர்களுடைய வாக்குத்தத்தங்களைக் கூட எப்படி நிறைவேற்ற என்னால் கூடும்.

**தகப்பன்.**—குமாரனே நீ இன்னும் இவைகளைச் சரியாயறியவில்லை.

**மகன்.**—ஆம் இவைகள் எனக்குச் சரியாய் விளங்கவில்லைதான். ஆனால், உமக்குச் சரியாய் விளங்குகிறதா.

**தகப்பன்.**—அவ்வளவு தெளிவாய் எனக்கும் விளங்கவில்லை நாம் இந்தக்காரியத்தை நன்றாய் நிதானித்து நம்முடைய போதகரிடத்தில் விசாரிப்போம்.

**மகன்.**—அப்படியேயாகட்டும்; நீர் போதகரிடத்தில் விசாரிப்பீரா?

**தகப்பன்.**—எனக்கு நல்ல சமயங்கிடைத்தபோது விசாரிப்பேன்.

**மகன்.**—என் ஞானத்தாய்தந்தைமார் நான் செய்ய வேண்டியகடமைகளை வாக்குத்தத்தம் செய்ததுமன்றி நான் விசுவாசிக்கவேண்டியதைக்கூட என்னிமித்தமாக வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார்களே இப்பொழுது விசுவாசப்பிரமாணத்தில் கிறிஸ்து நரகத்தில் இறங்கினதாக எழுதியிருக்கிறது. ஆனால், கிறிஸ்து தன்னுடன் சிலுவையில் அரையுண்ட கள்ளனிடத்தில் நீ இன்று என்னுடன் பரதிசையில் இருப்பாய் என்று சொல்லியிருக்க நான் எப்படி கிறிஸ்துநரகத்தில் இறங்கினாரென்று விசுவாசிப்பேன்; இதைக்கூட நீர் நம்முடைய குருவினிடத்தில் கேளும்.

**தகப்பன்.**—அப்படியே ஆகட்டும். ஆனால் நாம் அவசியமாய் விசாரிக்கவேண்டிய சங்கதி யிதுவல்லவே.

**மகன்.**—ஒருகாலமும் அப்படியல்ல, அந்தப்போதகர் சொன்னது என்னவெனில் இவைகள் சரியென்று நம்புகிறவர்கள் பாப்புமார்க்கத்தின் எல்லாவிதமான தப்புப்போதங்களைக்கூட சரியென்று நம்பக்கூடுமே: கிறிஸ்தவர்கள் அல்லது, அந்த நாமத்தைத்தரித்தவர்கள் அவருடைய கட்டளையையும், அவர் தந்த வேதத்திலுள்ளவைகளையும் மாற்றித் தமது இஷ்டப்படி செய்கிறது மிகவும் பயங்கரமான காரியம். இவைகளுக்காக அவர்கள் ஒருநாள் கணக்குச்சொல்லவேண்டியது வரும்; இதுசரிதானென்று நீர் நினைக்கிறீரா.

**தகப்பன்.**—ஆம் நிச்சயமாய் ஒவ்வொரு கிரியைகளும் நியாயத்தீர்ப்புநாளில் கொண்டுவரப்படும்.

**மகன்.**—அப்படியானால் நாம் விசுவாசிக்கும் ஒவ்வொரு விசுவாசமும் நாம் செய்யும் ஒவ்வொருசெய்கையும் தேவனால் கட்டளையிடப்பட்டதா என்றும் தேவனுக்கு உகந்ததாயிருக்கிறதாவென்றும் நாம் வேதத்தை ஆராய்ந்துபார்த்து நிச்சயப்படுத்தவேண்டியது அவசியமல்லவா.

**தகப்பன்.**—ஆம் நாம் அப்படிச்செய்யவேண்டியது அவசியந்தான்.

**மகன்.**—நாம் வேதத்தை நன்றாய் ஆராய்ந்துபார்க்கவேண்டியது என்றும் நாம் நீதிமான்களாக்கப்படவேண்டியதென்றும் அல்லது தண்டிக்கப்படவேண்டியதென்றும் நமக்கு ஒரு ஆத்துமா உண்டென்றும் அது இரக்ஷிக்கப்படவேண்டியதென்றும் அல்லது இழந்துபோகவேண்டியதென்றும் தெய்வீகத்திற்கு அடுத்தகாரியங்களை நாம் அலக்ஷியம்பண்ணலாகாதென்றும் அப்படி அலக்ஷியம்பண்ணினால் அது நமக்கு நித்தியகேடாயிருக்குமென்றும் அந்தப் போதகர்சொன்னார்.

**தகப்பன்.**—மிகவும் நல்லது. நீ யவருடைய ஆலோசனையின்படி செய்கிறது உத்தமம்.

**மகன்.**—ஆம். நான் அப்படியே செய்யவேண்டுமென்று நினைக்கிறேன் நீரும் அதற்கு உத்தரவுகொடுத்தபடியால் மிகவும் சந்தோஷமாய் அப்படியே செய்வேன். ஆனால், நான் எதில் ஆராய்ந்துபார்க்கிறது செப புஸ்தகத்திலா, அல்லது புதிய ஏற்பாட்டிலா.

**தகப்பன்.**—புதிய ஏற்பாடுதான். நம்முடைய எல்லா நடத்தைகளுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நூலாயிருக்கிறது. ஆனால், ஞானஸ்நானத்தைக்குறித்து வேதத்திலிருக்கிறதைத்தான் செபபுத்தகம் கற்பிக்கிறதென்று எனக்குத் தோன்றுகிறது.

**மகன்.**—தகப்பனே நீர் செபபுஸ்தகம் கற்பிக்கிறதென்று நினைத்தீரானால்! அப்பொழுது சர்ச்சு சபையாராகிய

நாம் வேத செபபுஸ்தகத்தின்படியும், செபபுஸ்தகத்தின்படியும் நடக்கிறதே இல்லை. நான் எப்படி ஞானஸ்நானம் பெற்றேன், தகப்பனே எனக்கு அது நினைவு இல்லை.

**தகப்பன்.**—குமாரனே நீ தெளிக்கப்பட்டாய், அது உனக்கு நினைவு இராது; அப்போது நீ பிறந்து ஒருமாதங்கூட ஆகவில்லை.

**மகன்.**—தேவன் சிசுக்களுக்குத் *தெளிக்கும்படி ஏற்படுத்தி இருக்கிறாரா? அல்லது அப்படிச்செய்கிறது தனக்கு இஷ்டமென்று புதிய ஏற்பாட்டில் எங்கேயாவது காட்டியிருக்கிறாரா?

**தகப்பன்.**—அதைக்குறித்து எனக்குத் தெளிவாய்த் தெரியாது நமதுசபைக் குருவினிடத்தில் கேட்போம். அப்படிக் குழந்தைகளுக்குத் தெளிக்கிறதினால் ஒரு பொல்லாப்பும் இல்லையென்று நினைக்கிறேன்.

**மகன்.**—அப்படிச்செய்கிறது மிகவும் பொல்லாத காரியமென்று அந்தப்போதகர் சொன்னார்.

**தகப்பன்.**—எப்படி பொல்லாத காரியமென்று சொன்னார்.

**மகன்.**—தகப்பனே சிசுவுக்குத்தெளிக்க ஆரம்பித்து அது பிரபல்லியமானது முதல் விசுவாசிகளுடைய ஸ்தானம் குறைவானதுமன்றிக் கிறிஸ்துவின் ஏற்பாட்டிற்கு விரோதமாய் மனிதர்களுடைய ஏற்பாடு பிரபல்லியமாயிற்று இது பொல்லாத காரியமல்லவா. இதனால்தான் நமதுதேசத்தில் விசுவாசியின் ஸ்தானம் ஒரு ஆச்சரியமான காரியம்போலக் காணப்படுகிறது என்று அந்தப்போதகர் சொன்னார்.

**தகப்பன்.**—ஆச்சரியந்தான். அவர் சொன்னதில் உண்மையுண்டென்று நினைக்கிறேன்.

---

*ஞானஸ்நானம்.

**மகன்.**—இவ்வளவுதானா! இதைப்பார்க்கிலும் அதிக கேடுண்டு.

**தகப்பன்.**—அப்படியா அதென்ன மகனே.

**மகன்.**—இதனால் மனிதர்கள் ஒரு பொய்யை நம்புதற்கு ஏதுவாயிற்று, அது மிகவும் பொல்லாதபொய்.

**தகப்பன்.**—அப்படியானால் அது மிகவும் பொல்லாததுதான். அந்தப் போதகர் அதை எப்படி ருசுபடுத்தினார்.

**மகன்.**—தாங்கள் கிறிஸ்துவின் அவயவங்களா யிருக்கிறதாகவும் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறதாகவும் பரலோக சுதந்தரவாளிகளாகவும் சொல்லித் தாங்கள் மகிமையைச் சுதந்தரிப்பார்களென்று நம்பும்படிச் செய்கிறது. ஆனாலோ தங்கள் கிரியைகளினால் தேவகோபத்திற்கு உட்பட்டிருக்கிறதாக நன்றாய்க் காணப்படுகிறது. தேவனுடைய பிள்ளைகளாகிறதற்கு இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசிக்கும் விசுவாசமேயன்றி வேறேயொரு வழியுமில்லையென்று அந்தப் போதகர் சொன்னார். தகப்பனே இது உண்மைதானா?

**தகப்பன்.**—அது அப்படிதானென்று நான் நினைக்கிறேன்; ஏனெனில் வேதம் அப்படிச்சொல்லுகிறது. கலாத்தியர் ௩: ௨௬.

**மகன்.**—தகப்பனே நான் தெளிக்கப்படுகையில் தேவனுடைய பிள்ளையாக்கப்பட்டேனா.

**தகப்பன்.**—மகனே ஞானோபதேசம் அப்படிச் சொல்லுகிறது.

**மகன்.**—அது எனக்குந் தெரியும், ஆனால் அதை நம்பலமா. உம்மால் நம்பக்கூடுமா வேதத்தில் அப்படி இருக்கிறதா.

**தகப்பன்.**—அது எனக்கு நன்றாய்த் தெரியாதென்று நானுனக்கு முன்னமே சொல்லவில்லையா.

**மகன்.**—என் தம்பிக்கு 'ஞானஸ்தானம் கொடுக்குமுன் இவைகளை நான் சரியாய் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்

தகப்பனே நீரும் அப்படி விரும்பவில்லையா. நாம் கிறிஸ்துவின் ஸ்நானத்தை ஒன்றும் அறியாத குழந்தைகளுக்குக் கொடுத்துத் வேதத்தை மாற்றுகிறது மிகவும் பரிதாபப்படத்தக்க காரியம். இதைப்பற்றித் தேவனுடைய சன்னிதானத்தில் எவ்விதமாகக் கணக்குக்கொடுப்போம். நான் இப்போது மரித்தால் கிறிஸ்து என்னிடத்தில் கணக்குக்கேட்பாரேயாகில் நான் எதை அவருக்குப் பதில் சொல்லவேண்டியதோ எனக்குத் தெரியாது, தகப்பனே உமக்குத் தெரியுமா?

**தகப்பன்.**—நான் கணக்குக்கொடுக்க ஆயத்தமாயில்லை, இதைத்தவிர அந்தப்போதகர் இன்னும் என்னசொன்னார்.

**மகன்.**—அவர் எல்லாம் ஒன்றாய் சேர்ந்துச்சொன்னதாவது, நாம் இப்போது செய்யப்போகிற காரியத்தைப்பற்றி இதுவரையில் நான் சொன்னகாரணங்களைக் கேட்டீர்களே. நான் இப்போது உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவெனில் நீங்களே இந்தக் காரியங்களைச் சரியாய் ஆராய்ந்து பாருங்கள், அப்படி ஆராய்ந்துபார்த்தபிறகு எது உண்மையோ அதைச் செய்யுங்கள். நாம் செய்யும் ஒவ்வொரு செய்கைக்காகத் தேவனிடத்தில் கணக்குச் சொல்லவேண்டியவர்கள் என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் வெட்கமாவது பயமாவது பிறர்தயவாவது வேறே ஏதாவது தடையாயிருக்கக்கூடாது. அவருடைய சித்தத்தைச் சரியாய் நிறைவேற்றாவிட்டால், நாம் ஒருபோதும் பாக்கியமாயும் சந்தோஷமாயும் இருக்கமாட்டோம் நம்முடைய அருமையான இரக்ஷகர்பெற்ற ஸ்நானத்தைக்குறித்துத் தேவன் சந்தோஷித்து அங்கிகரித்ததுபோல நம்முடைய ஸ்நானத்தை அவர் அங்கிகரிப்பாரேயாகில், நாம் எந்த பிரயாசத்தையும் ஒரு பொருட்டாய் எண்ணவேண்டியதில்லை.

**தகப்பன்.**—ஆம் அவர்சொன்னது யதார்த்தமான வார்த்தையே, இத்தோடே முடித்தாரா?

**மகன்.**—இல்லை, தகப்பனே! ஸ்நானம் பெறப்போகிறவர்களைப் பார்த்து அவர்களினிமித்தம் மிகவும் சந்தோஷப்பட்டு அவர்களுக்குச் சொன்னது நீங்கள் தேவகிருபையைக்கொண்டு அவருடைய சித்தத்தின்படி செய்யவும் இயேசுகிறிஸ்துவின் கட்டளையின் பிரகாரஞ்செய்து அவருக்குக் கீழ்ப்படியவும் எல்லாருக்கு முன் வெளியரங்கமாய் அவரை யங்கீகரித்து அவருடைய நாமத்தினால் ஸ்நானம் பெற வந்ததின் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன் என்று சொன்னார்.

**தகப்பன்.**—மகனே இதைப்பார்க்கும்படி உனக்கு நல்லசமயம் கிடைத்ததற்கு நான் சந்தோஷப்படுகிறேன், எனக்குத் தெரிந்திருந்தால் நானும் வந்திருப்பேன்.

**மகன்.**—ஆம் தகப்பனே, இதுமாத்திரம் அல்லாமல் இன்னும் அவர்களைப்பார்த்து அவர்களுக்காகத் தேவன்செய்த வாக்குத்தத்தங்களையும் அவர்களுக்காகப் பரலோகத்திலிருக்கும் சந்தோஷமும் அவர்களுக்கிருக்கும் கடமைகளும் அவர்களின் நிமித்தம் தேவன் மனுஷ அவதாரமெடுத்துப் பாடுபட்டு இரத்தம் சிந்தி இப்போது தம்முடைய ஆவியினால் தம்முடைய மகிமைக்கு நடத்துகிற அந்த இயேசுகிறிஸ்துவுக்கு அவர்கள் பட்டகடனையும் சொன்னார்.

**தகப்பன்.**—மிகவும் நன்றாயிருக்கிறது இவ்வளவுதானா

**மகன்.**—இல்லை மனிதர் உங்களை அசட்டைசெய்து துன்பப்படுத்தினாலும் பயப்படாதிருங்கள் ஏனென்றால் அவர்கள் இரக்ஷகரைக்கூட அசட்டைசெய்து துன்பப்படுத்தினார்கள் அவரைப்பின் பற்றுகிறவர்களையும் துன்பப்படுத்தினாலும் அதைரியப்படவேண்டியதில்லை. பெந்திகோஸ்துநாளில் ஸ்நானம்பெற்ற ஆயிரம் ஆயிரம்பேர்களும் அப்போஸ்தலர்களும் உங்கள் பட்சத்தில் இருக்கிறார்கள். இரக்ஷகர் உங்கள் பட்சத்தில் இருக்கிறார் பிதாவும் பரிசுத்த ஆவியும் உங்கள்பட்சத்தில் இருக்கிறார். தம்முடைய எல்லாநடத்தைகளுக்கும் நூலாயும், ஆதாரமாயும் இருக்கிற புதிய ஏற்பாடும் உங்கள் பட்சத்

தில் இருக்கின்றது; ஆகையால் சிறுகூட்டமே பயப்படாதிருங்கள். உங்களுக்கு அந்த இராச்சியத்தைக்கொடுக்க பிதாவானவர் சித்தமாயிருக்கிறாரென்கிற வேதவாக்கியத்தை எடுத்துச்சொன்னார்

**தகப்பன்.**—அவர்களைத் தைரியப்படுத்தவும் உச்சாகப்படுத்தவும் அவர் சொன்னது போதுமானவார்த்தைதான்.

**மகன்.**—ஆம், அவர் சொன்னவார்த்தைகள் மிகவும் தைரியப்படத்தக்க வார்த்தைகளும் உச்சாகப்படத்தக்க வார்த்தைகளுந்தான் அதனால் நான் மிகவும் எழுப்பப்பட்டேன். அவர்களோடுகூட நானும் ஸ்நானம்பெற மனதுள்ளவனானேன். அவர் சொன்னதெல்லாம் உண்மையென்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை. ஆனால் அந்தகாரியத்தைக் குறித்து நான் இன்னும் அதிகமாய் ஆராயயோசித்திருக்கிறேன்.

**தகப்பன்.**—ஆம் மகனே நீ அப்படியேசெய் நானும் செய்கிறேன். செபபுஸ்தகம் அவ்வளவாய் அவர்கள் பட்சம் இருந்ததென்று நான் எண்ணினதில்லை. ஞானத்தாய் தகப்பன்மார்களுடைய வாக்குதத்தங்களில் எனக்கு அதிகநம்பிக்கையில்லை. நான் ஒருதடவையில் ஒரு குழந்தைக்குப் பதிலாய் வாக்குத்தத்தம்பண்ணினேன் அந்தக்குழந்தை இப்போது ஒரு பொல்லாதபையனாயிருக்கிறான், அவன் பிசாசை வெறுக்கிறதும் இல்லை, அவன் விசுவாசபிரமாணத்தை நம்புகிறதுமில்லை. வேதகற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதுமில்லை. நான் ஒருநாள் அவனைச் சந்தித்து அவனிமித்தம் நான் செய்தவாக்குத்தத்தங்களைச் சொன்னேன் அதற்கு அவன் அப்படி செய்யும்படி உமக்கு உத்தரவுகொடுத்ததுயார்? நான் உத்திரவு கொடுத்தேனா, அல்லது வருந்தி கேட்டுக்கொண்டேனா என்றான். நீயல்லவென்று சொன்னேன் அதற்கு அவன் நீர் செய்த வாக்குதத்தங்களை நீரே நிறைவேற்றிக்கொள்ளும். இனிமேல் உம்மை நான் கேட்டுக்கொண்டால் அப்போது நீர் எனக்காக வாக்குத்தத்தம் செய்யலாமென்றான்.

**மகன்.**—இது மிகவுந் துணிகரமான வார்த்தை ஆனால் அப்படி கிறிஸ்தவனாக்கப்பட்ட அனேகபொல்லாத பிள்ளைகள் உண்டென்று நினைக்கிறேன், தகப்பனே அவனுக்கு நீர் இன்னும் என்னசொன்னீர்.

**தகப்பன்.**—அவனுக்கு நான் ஒன்றும் சொல்லவில்லை. இனிமேல நான் ஒரு குழந்தைக்கும் ஞானத்தகப்பனாயிருந்து அந்தக் குழந்தைக்குப்பதிலாய் வாக்குத்தத்தம் பண்ணமாட்டேன் என்று தீர்மானித்தேன்.

**மகன்.**—ஆம் தகப்பனே அப்படித் தீர்மானஞ்செய்ய உமக்கு நல்லகாரணம் உண்டு; ஒரு குழந்தை பெரியவனானபிறகு அவன் புத்திசாலியாய் இருப்பானென்றாவது புத்தியீனனாயிருப்பானென்றாவது நாஸ்திகனாயிருப்பானென்றாவது யாவரால் சொல்லக்கூடும்? அந்தப் போதகர் ஒவ்வொருவனும் தன் தேவனிடத்தில் தனக்குத்தானே உத்தரவாதியாயிருக்கவேண்டும் என்று சொன்னது சத்தியமென்று நம்புகிறேன். மற்றொருமனிதனால் தான் மனந்திரும்பவும் விசுவாசிக்கவும் அல்லது கீழ்ப்படியவும் கூடாது. இவைகள் ஒவ்வொன்றையும் தானே செய்யவேண்டியது அல்லது தானே அறியவேண்டியது. மற்றொருவன் பாத்தியஸ்தனாயிருக்கக்கூடாது. இன்னொருவனைக்கொண்டு காரியம் நடப்பிப்பது நியாயம் ஆனால் அப்படியே இன்னொருவனைக்கொண்டு நான் மேலுலகத்திற்கு போக நினைக்கலாமல்லவா! (அப்படிகூடாது).

**தகப்பன்.**—ஆம் எதார்த்தம் இன்னும் ஏதாகிலும் அவர்சொன்னாரா.

**மகன்.**—இதற்குமேல் அவர்சொன்னது எனக்கு ஞாபகம் இல்லை. ஒரு ஞானப்பாட்டைப்பாடிப் பிறகு ஆசீர்வாதஞ்செய்து முடித்தார்.

முற்றிற்று.

CALEB FOSTER, FOSTER PRESS, MADRAS.—1871.